## கொழும்பு மாநகர சபை

## கொழும்பு மாவட்டம்

### 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1. நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பித்தல்

மீளாய்வாண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2011 ஏப்ரல் 28 ஆம் திகதியும் முன்னைய ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2010 யூன் 30 ஆம் திகதியும் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருந்தன.

### 1.2 அபிப்பிராயம்

இவ்வறிக்கையில் காணப்படும் எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் காரணமாக கணக்காய்வுக்காக சமர்ப்பிக்கப்பட்டுள்ள கொழும்பு மாநகர சபையின் 2010 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்க முடியாதுள்ளது.

### 1.3 நிதிக் கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 1.3.1 கணக்கீட்டு குறைபாடுகள்

(அ) மீளாய்வாண்டின் போது கொள்வனவு செய்யப்பட்டு வழியில் நின்ற ரூபா 310,789,597 தொகையான நிலையான சொத்துக்கள் மூலதனமாக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) வருமான சேகரிப்பாளர்களின் பிணை வைப்புக் கணக்கு மீதி மற்றும் அதற்குரிய முதலீட்டுக் கணக்கு மீதி என்பவைகளுக்கிடையே ரூபா 1,129,608 தொகையான வேறுபாடு வெளிப்படுத்தப்பட்டது.

(இ) 2010 ஆம் ஆண்டின் கணக்காய்வுக் கட்டணத்திற்காக கணக்குகளில் ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(ஈ) பொது நூலகத்தின் முன்பக்கத் தோற்றத்தை மாற்றும் ஒப்பந்தமொன்றுக்காக செலவிடப்பட்டிருந்த ரூபா 9,812,264 தொகையானது காணி மற்றும் கட்டிடக்

கணக்கில் சாட்டுதல் செய்வதற்குப் பதிலாக கட்டிட பராமரிப்புக் கணக்கில் சாட்டுதல் செய்யப்பட்டிருந்தது.

(உ) மாநகர திறைசேரி திணைக்களம் தவிர ஏனைய திணைக்களங்களின் உத்தியோகபூர்வ இல்லங்களுக்கான நிலுவை வாடகை கணிப்பீடு செய்யப்பட்டு கணக்குகளுக்கு கொண்டுவரப்பட்டிருக்கவில்லை.

(ஊ) மாநகர ஆணையாளரின் 2003 செப்தெம்பர் 30 ஆந் திகதிய கடிதத்தின் பிரகாரம் கட்டிட வரைபடத்திட்டங்களில் அறவிடப்படுகின்ற சேவைக் கட்டணம், தண்டப் பணம் என்பன மோட்டார் வாகனங்கள் தரிப்பிட இடத்தை அபிவிருத்தி செய்வதற்காக ஈடுபடுத்துவதற்கு பொருத்தமான கணக்கில் செலவு வைப்பதற்குப் பதிலாக அறவிடப்பட்ட ரூபா 420,509,871 தொகை மீளச் செலுத்த வேண்டிய வைப்பின் கீழ் கணக்கு வைக்கப்பட்டிருந்தது.

(எ) கணக்கீட்டு நியம இல 10 இற்கு கவனம் செலுத்தாது முன்னைய வருடங்களுக்குரிய பெறுவனவு/ கொடுப்பனவு அல்லது கொடுக்கல் வாங்கல்கள் முன்னைய வருட சீராக்க கணக்கின் ஊடாக கணக்கு வைத்தலை சபை தொடர்ந்தும் செய்துவருவதுடன் அதனால் ஏதாவது கணக்காண்டில் நிதிக் கூற்றில் காண்பிக்கப்படுகின்ற நிதிப் பெறுபேறுகள் கருத்திற் கொள்ளக் கூடிய அளவில் வேறுபட்டிருந்தது. முன்னைய 06 வருடங்களுக்குரிய நிலைமை பின்வருமாறு இருந்தது.

| கணக்காண்டு | நிதி விளைவுகள் / மிகை (பற்றாக்குறை) | தேறிய சீராக்கல் வரவு / செலவு | தேறிய விளைவு |
|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா |
| 2004 | (11,308,562) | 41,130,053 | 30,001,491 |
| 2005 | 90,846,722 | 49,396,657 | 140,243,379 |
| 2006 | 360,001,825 | (14,894,954) | 345,106,871 |
| 2007 | (614,038,292) | (152,073,255) | (766,111,547) |
| 2008 | (162,900,199) | 204,851,320 | 41,951,121 |
| 2009 | 818,149,934 | 233,731,266 | 1,051,881,200 |

### 1.3.2 கணக்குகளிலிருந்து கைவிடப்பட்டவைகள்

(அ) பௌத்தாலோக மாவத்தையில் கடை இல. 374/12 இற்கான 2010 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறான நிலுவை வருமானம் ரூபா 102,550 தொகை வருமானக் கணக்கிற்கு கொண்டுவரப்பட்டிருக்கவில்லை.

(ஆ) நீர் வழங்கள் மற்றும் நீர் வடிகாலமைப்புச் சபைக்கு வாடகைக்கு விடப்பட்டிருந்த மாளிகாகந்த சுற்றாடலில் உள்ள சொத்துக்களுக்கு மீளாய்வாண்டிற்காக கிடைக்க வேண்டிய ரூபா 35 மில்லியன் தொகையான வாடகை வருமானம் கணக்குகளிற்கு கொண்டுவரப்பட்டிருக்கவில்லை.

### 1.3.3 வகைப்படுத்தல் வழுக்கல்

(அ) மீண்டெழும் வருமானமாக கணக்கு வைக்கப்பட வேண்டிய ரூபா 175,610,492 தொகையான முத்திரைக் கட்டணம் மூலதன வருமானமாக கணக்கு வைக்கப்பட்டிருந்தது.

(ஆ) மீளாய்வாண்டின் போது வாகனக் கணக்கில் சாட்டுதல் செய்ய வேண்டிய பெறுமதிகளின் கூட்டுத்தொகை ரூபா 80,592,270 ஆனது தளபாடமும் பொருத்திகளும் கணக்கிலும், தளபாடம் மற்றும் பொருத்திகள் கணக்கில் சாட்டுதல் செய்ய வேண்டிய பெறுமதிகளின் கூட்டுத்தொகை ரூபா 13,330,266 ஆனது வாகனக் கணக்கிலும் சாட்டுதல் செய்யப்பட்டமையினால் வாகனங்கள் கணக்கு ரூபா 67,262,004 இனால் குறைவாகவும் தளபாடமும் பொருத்திகளும் கணக்கு ரூபா 67,262,004 இனால் அதிகரித்தும் காண்பிக்கப்பட்டிருந்தது.

### 1.3.4 முறையற்ற வெளிப்படுத்தல்கள்

பேரேட்டுக் கணக்குகளின் பிரகாரம் 2010 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு கிடைக்க வேண்டிய வியாபாரச் சந்தை வாடகை ரூபா 218,144,593 தொகை ரூபா 21,844,593 எனக் கணக்குகளில் காண்பிக்கப்பட்டிருந்ததுடன் வேறுபாடான ரூபா 196,300,000 தொகை பெற வேண்டிய வாடகையாக (வீடு, உத்தியோகபூர்வ இல்லங்கள், வியாபாரம் மற்றும் ஏனைய) கணக்கு வைக்கப்பட்டிருந்தது.

### 1.3.5 இணக்கஞ் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள்

(அ) நிலையான சொத்துப் பெறுமதிகளின் கூட்டுத்தொகை மூலதன ஈடுபடுத்தலுக்கான வருமானப் பங்களிப்புக் கணக்கிற்கு சமமாக இருக்க வேண்டிய போதிலும் ரூபா 37,144,356 தொகையான வேறுபாடு அவதானிக்கப்பட்டது.

(ஆ) 10 கணக்கு விடயங்களுக்குரிய கட்டுப்பாட்டுக் கணக்குகளின் பிரகாரம் மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 540,876,733 ஆக இருந்ததுடன் உபயோகப் பதிவேடுகளின் பிரகாரம் மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 534,793,713 ஆக இருந்தது.

### 1.3.6 செலுத்த வேண்டிய கணக்குகள்

ரூபா 17,157,830 தொகையான பழைய களஞ்சிய கடன் கொடுத்தோர் மீதியைத் தீர்த்து வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. 933 களஞ்சிய கடன்கொடுத்தோர்களுக்குரிய ரூபா 10,526,078 தொகையானது 10 வருடங்களுக்கும் மேலான காலம் தீர்த்து வைக்கப்படாமல் முன் கொண்டுவரப்பட்டிருந்தது.

### 1.3.7 கணக்காய்விற்கான சான்றுகள் இன்மை

#### (அ) பதிலளிக்கப்படாத கணக்காய்வு ஐய வினாக்கள்

2011 ஆகஸ்ட் 15 வரையில் 18 கணக்காய்வு ஐய வினாக்களுக்கு பதில் அளிக்கப்பட்டிருக்கவில்லை. அவ் ஐய வினாக்களுடன் தொடர்புடைய கணிப்பிடப்படக் கூடிய கொடுக்கல் வாங்கல்களின் பெறுமதி ரூபா 5,327,487,934 ஆகும். விபரம் கீழே காணப்படுகின்றது.

| வருடம் | வழங்கப்பட்ட கணக்காய்வு ஐய வினாக்களின் எண்ணிக்கை | கணிப்பீடு செய்யப்பட்ட பெறுமதி |
|---|---|---|
| | | ரூபா |
| 2005 | 06 | 2,419,060,210 |
| 2006 | 09 | 2,841,818,526 |
| 2007 | 02 | 25,569,198 |
| 2008 | 01 | 41,040,000 |

**(ஆ) தகவல்கள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படாமை**

தேவையான தகவல்கள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படாமையில் ரூபா 6.843,202,733 கூட்டுத்தொகையான கொடுக்கல் வாங்கல்களை கணக்காய்வின் போது திருப்திகரமானதாக சான்றுதிசெய்ய முடியாதிருந்தது.

### 1.3.8 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் முதலியவற்றுடனான இணங்காமைகள்

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்களிடனான தொடர்பு | இணங்காமைகள் |
|---|---|
| (அ) **இலங்கைக் குடியரசின் நிதிப்பிரமாணம்** | |
| (i) நி.பி 395 | 2 வங்கிக் கணக்குகளுக்குரிய வங்கிக் கணக்கிணக்கக் கூற்று தயாரிக்கப்பட்டு சமர்ப்பிக்கும் போது நீண்ட தாமதம் அவதானிக்கப்பட்டது. |
| (ii) நி.பி 396(ஈ) மற்றும் நி.பி 394(ஈ) | வழங்கப்பட்டு 06 மாதங்களைக் கடந்த கொடுப்பனவிற்காகச் சமர்ப்பிக்கப்படாத காசோலைகள் தொடர்பாக தொடர்புடைய பிரமாணங்களின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |

(iii) நி.பி 770 மற்றும் நி.பி 772

உடைந்த பொருட்களை பகிரங்க ஏலத்தில் அல்லது திறந்த கேள்வி கோரல் என்பவற்றினால் அகற்ற வேண்டியிருந்த போதிலும் அவ் அறிவுறுத்தல்கள் பின்பற்றப்பட்டிருக்கவில்லை.

(iv) நி.பி 1645, நி.பி 1646, நி.பி 1647 மற்றும் நி.பி 1653

(அ) கனரக வாகனம் மற்றும் இயந்திரங்கள் தொடர்பான ஓட்ட அறிக்கை மற்றும் மாதாந்த பொழிப்புக்கள் அடுத்துவரும் மாதத்தின் 15 ஆந் திகதி அல்லது அதற்கு முன் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) வாகனத்திற்காக வாகனம் பதிவேடு மற்றும் சம்பவத் திரட்டுப் புத்தகம் என்பன பேணப்பட்டிருக்கவில்லை.

(இ) அனேகமான வாகனங்களின் மைலோ மீற்றர் செயற்படாது ஓடப்பட்டிருந்தன.

(ஆ) 1983 இன் 12 ஆம் இலக்க பணிக்கொடைக் கொடுப்பனவு அதிகாரச்சட்டம்

ஓய்வு பெற்றுச் செல்கின்ற உத்தியோகத்தர்களுக்கு 30 நாட்களுக்குள் பணிக்கொடை கொடுப்பனவு செய்ய வேண்டிய போதிலும் 2010 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு அதற்கு முன்னர் ஓய்வு பெற்றுச் சென்ற உத்தியோகத்தர்களுக்குச் செலுத்த வேண்டிய ரூபா 504,036 தொகைகளான பணிக் கொடைக் கொடுப்பனவு உரிய காலப்பகுதியின் போது செலுத்தப்பட்டிருக்கவில்லை.

(இ) **சுற்று நிருபம்**

(i) 1996 ஏப்ரல் 20 ஆந் திகதிய எம்எப் 6/1/1/96 ஆம் இலக்க திறைசேரிச் சுற்றுநிருபத்தின் 2 ஆம் பிரிவு மற்றும் 2010 ஒக்தோபர் 11 ஆந் திகதிய

தொடர்புடைய சுற்றுநிருப அறிவுறுத்தல்களின் பிரகாரம் வெளிநாட்டுப் பிரயாண முற்பணம் நாட்டிற்குள் பிரவேசித்து 30 தினங்கள் கடப்பதற்கு முன் தீர்க்கப்பட வேண்டியிருந்த போதிலும் மீளாய்வாண்டின் போது வெளிநாட்டுப்

| | | |
|---|---|---|
| | 1/2010/01 ஆம் இலக்க திறைசேரிச் சுற்று நிருபத்தின் 9(iii) ஆம் பிரிவு | பிரயாணங்களுக்காக 04 உத்தியோகத்தர்களினால் பெறப்பட்டிருந்த ரூபா 164,624 தொகையான பணம் குறிப்பிட்ட காலப்பகுதியினுள் தீர்க்கப்பட்டிருக்கவில்லை. |
| (ii) | 1990 ஒக்தோபர் 10 ஆந் திகதிய 41/90 ஆம் இலக்க பொது நிருவாகச் சுற்றறிக்கை | மோட்டார் வாகன அணிக்குரிய வாகனங்கள் தொடர்பாக எரிபொருள் நுகர்வு தொடர்பான பரிசோதனையொன்று வருடாந்தம் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. |

## 2. நிதி மற்றும் செயற்பாட்டு மீளாய்வு

### 2.1 நிதிசார் விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் மீளாய்வாண்டிற்கான சபையின் வருமானத்தை விஞ்சிய மீண்டுவரும் செலவினம் ரூபா 125,446,520 ஆக இருந்ததுடன், அதற்கு ஒத்த முன்னைய ஆண்டின் வருமானத்தை விஞ்சிய மீண்டுவரும் செலவினம் ரூபா 360,539,777 ஆக இருந்தது.

### 2.2 நிதிக் கட்டுப்பாடு

**வங்கிக் கணக்கு**

(அ) இரண்டு வங்கிக் கணக்குகளில் மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டின் இறுதியில் முறையே ரூபா 752,570,824 ரூபா 584,983,628 தொகை மேலதிகப் பற்று மீதி அவதானிக்கப்பட்டதுடன் முன்னைய ஆண்டுடன் இணக்கஞ் செய்யும் போது மீளாய்வாண்டிற்கான மேலதிகப் பற்று மீதி ரூபா 29% இனால் அதிகரித்திருந்தது.

(ஆ) வங்கிக் கணக்கிணக்க கூற்றின் பிரகாரம் அவதானிக்கப்பட்ட தகவல்கள் பின்வருமாறு இருந்தது.

| | | வங்கிக் கணக்குகளின் எண்ணிக்கை | சந்தர்ப்பங்களின் எண்ணிக்கை | காலப்பகுப்பாய்வு | | | மொத்தம் |
|---|---|---|---|---|---|---|---|
| | | | | 6 – 12 மாதம் வரையும் | 01 - -3 வருடங்கள் வரை | 03 வருடங்களுக்கு மேல் | |
| | | | | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| (i) | வழங்கப்பட்டிருந்தும் கொடுப்பனவிற்காகச் சமர்ப்பிக்கப்படாத காசோலை தொடர்பாக இலங்கை குடியரசின் நிதிப் பிரமாணம் 396(இ) இன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படாமை | 02 | 558 | 1,823,383 | 1,016,372 | 1,309,341 | 4,149,096 |
| (ii) | இனங்கானப்படாத செலவுகள் தொடர்பாக வங்கியில் விசாரித்து நடவடிக்கை எடுக்காமை | 04 | 258 | - | 1,688,436 | 244,946 | 1,933,382 |
| (iii) | தேறாத வைப்புக்கள் தொடர்பாக வங்கியில் விசாரித்து நடவடிக்கை எடுக்கப்படாமை | 01 | 04 | - | 18,611 | - | 18,611 |

## 2.3 வருமான நிர்வாகம்

### 2.3.1 மதிப்பிடப்பட்ட வருமானம், உள்ளபடியான வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

மாநகர நிதியாளரினால் மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டிற்குரிய சமர்ப்பிக்கப்பட்ட மதிப்பிடப்பட்ட வருமானம், உள்ளவாறான வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான விபரம் கீழே காண்பிக்கப்பட்டுள்ளது.

| | வருமான விடயம் | 2010 | | | 2009 | | |
|---|---|---|---|---|---|---|---|
| | | மதிப்பிடப் பட்ட | உள்ளவா றான | திசெம்பர் 31 இல் திரண்ட நிலுவை | மதிப்பி டப்பட்ட | உள்ள வாறான | திசெம்பர் 31 இல் திரண்ட நிலுவை |
| | | ரூபா '000 | ரூபா '000 | ரூபா '000 | ரூபா '000 | ரூபா '000 | ரூபா '000 |
| (i) | வீதவரியும் வரியும் | 2,348,445 | 2,232,633 | 2,619,836 | 2,274,231 | 2,177,205 | 2,553,745 |
| (ii) | வாடகை | 119,733 | 104,404 | 474,012 | 118,009 | 84,454 | 441,473 |
| (iii) | அனுமதிப்பத்திரக் கட்டணம் | 14,079 | 14,079 | - | 19,153 | 19,153 | - |
| (iv) | ஏனைய வருமானம் | 86,762 | 249,495 | 37,149 | 30,070 | 25,830 | 37,150 |

### 2.3.2 நீதி மன்றத் தண்டப் பணம்

நீதி மன்றத் தண்டப் பணமாக 2010 திசெம்பர் 31 ஆந் திகதி வரை கிடைக்க வேண்டிய தொகை கணிப்பீடு செய்யப்பட்டு கணக்குகளுக்கு கொண்டு வரப்பட்டிருக்கவில்லை.

### 2.3.3 நிலுவை ஆதன வரி

2010 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு நிலுவை ஆதனவரி மற்றும் பிடியாணைக்கட்டணங்கள் என ரூபா 2,603,060,920 தொகை இருந்தது. 2005 ஆம் ஆண்டின் பின்னர் பல வருட காலமாக நிலுவை வாடகையினை அறவீடு செய்வதற்காக மாநகர சபை கட்டளைச் சட்டத்தின் (252 அதிகாரம்) 254(அ) (1) மற்றும் 256 யாப்புச்சட்ட அறிவுறுத்தல்களின் பிரகாரம் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 2.4 செலவினக் கட்டமைப்பு

மீளாய்வாண்டிற்கும் முன்னைய ஆண்டிற்குமான சபையின் பாதீடு செய்யப்பட்டதும் உள்ளவாறான செலவினமும் உரிய முரண்களுடன் கீழே காட்டப்பட்டுள்ளது.

| செலவின விடயம் | 2010 பாதீடு செய்யப்பட்டது | 2010 உள்ளவாறான | 2010 முரண் | 2009 பாதீடு செய்யப்பட்டது | 2009 உள்ளவாறான | 2009 முரண் |
|---|---|---|---|---|---|---|
| | ரூபா '000 | ரூபா '000 | ரூபா '000 | ரூபா '000 | ரூபா '000 | ரூபா '000 |
| **மீண்டுவரும் செலவினம்** | | | | | | |
| ஆளணி வேதனம் | 2,959,949 | 2,529,899 | 430,050 | 2,849,275 | 2,518,913 | 330,362 |
| ஏனையவை | 2,442,361 | 1,936,481 | 505,880 | 2,281,808 | 1,764,158 | 517,650 |
| உப மொத்தம் | 5,402,310 | 4,466,380 | 935,930 | 5,131,083 | 4,283,071 | 848,012 |
| மூலதனச் செலவினம் | 1,366,171 | 643,277 | 722,894 | 1,159,270 | 323,161 | 836,109 |
| மொத்தம் | 6,768,481 | 5,109,657 | 1,658,824 | 6,290,353 | 4,606,232 | 1,684,121 |

## 2.5 மிகை அறவீடுகள்

யாப்புச் சட்ட ஏற்பாடுகளின் கீழ் சட்டத்திற்கு முரணான கொடுப்பனவு தொடர்பில் பொறுப்பு வாய்ந்த நபர்களுக்கு எதிராக 2005 மற்றும் அதற்கு முன்னைய ஆண்டில் என்னால் விதிக்கப்பட்ட மிகை அறவீடுகளின் பிரகாரம் 2010 திசெம்பர் 31 இல் உள்ளவாறு அறவிடப்படுவதற்கு இருந்த மிகை அறவீடுகளின் மீதி ரூபா 449,173 ஆக இருந்தது.

## 2.6 மனிதவள முகாமைத்துவம்

### 2.6.1 அங்கீகரிக்கப்பட்ட மற்றும் உள்ளவாறான பதவி அணி

2010 திசெம்பர் 31 இல் உள்ளவாறு சபையின் அங்கீகரிக்கப்பட்ட மற்றும் உள்ளவாறான பதவியணி பற்றிய தகவல்கள் கீழே தரப்பட்டுள்ளன.

| பதவியினர் தரம் | அங்கீகரிக்கப்பட்டவை | உள்ளபடியானவை |
|---|---|---|
| நிறைவேற்றுனர்கள் | 563 | 231 |
| இரண்டாம் தரங்கள் | 2,141 | 1,715 |
| ஆரம்ப தரங்கள் | 9,434 | 4,987 |
| ஏனைய (அமைய, தற்காலிக) | - | 18 |
| | 12,138 | 6,951 |

## 2.7 சொத்துக்கள் முகாமைத்துவம்

### 2.7.1 பொருள் மெய்மையாய்வு

(அ) மீளாய்வாண்டில் பொருள் மெய்மையாய்வுச் சபையினால் அவதானிக்கப்பட்டிருந்த குறைவு / மிகைகள் தொடர்பாக தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) மீளாய்வாண்டிற்கான பொருள் மெய்மையாய்வு அறிக்கையின் பிரகாரம் அகற்றப்பட வேண்டிய 19,789 விடயங்களை பகிரங்க ஏலத்தின் மூலம் அகற்றப்பட்டிருக்கவில்லை.

(இ) பழுதுபார்த்து பயன்படுத்தக் கூடிய 2,031 விடயங்களை பழுதுபார்ப்பதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 2.7.2 செயற்பாடற்ற வங்கிக் கணக்கு

2010 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு இரண்டு வங்கி நடைமுறைக் கணக்குகளில் முறையே ரூபா 612,771 மற்றும் ரூபா 5,000 தொகையான மீதிகள் இரண்டு வருடங்களுக்கும் மேலான காலம் செயற்பாடற்றுக் காணப்பட்டது.

### 2.7.3 அறவிட வேண்டிய பதவியணியினர் கடன்கள்

2010 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு அறவீடு செய்ய வேண்டிய பதவியினர் கடன் மீதி ரூபா 544,096,731 ஆக இருந்ததுடன் இதில் ரூபா 119,026,735 கூட்டுத்தொகையானது 11 வருடங்களுக்கும் மேலான காலமாக அறவீடு செய்யப்படாமல் முன்கொண்டு வரப்பட்டிருந்தது.

## 2.8 மருந்து இருப்புக்களின் கட்டுப்பாடும் கொள்வனவும்

(அ) 2010 மார்ச் 09 ஆந் திகதி மேற்கொள்ளப்பட்ட பொருள் மெய்மையாய்வின் பிரகாரம் ரூபா 177,801 பெறுமதியான அழிவடைந்த மருந்துகளை பதிவழிப்பதற்கு சிபார்சு செய்யப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், கணக்காய்வுப் பரிசோதனைச் சந்தர்ப்பத்தின் போது அந்த மருந்துகள் முறையற்ற விதத்தில் களஞ்சியத்தில் களஞ்சியப்படுத்தப்பட்டிருந்ததுடன் பதிவழிப்பதற்கு மற்றும் அழித்துவிடுவதற்குத் தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை. அந்த மருந்துகளுக்குப் புறம்பாக மேலும் 12 வகையான காலாவதியான மருந்துகளும் களஞ்சியத்தில் காணப்பட்டன.

(ஆ) 2010 செப்தெம்பர் 07 ஆந் திகதி மேற்கொள்ளப்பட்ட கணக்காய்வுப் பரிசோதனையின் போது சில மருந்துகள் எலியினால் அழிவடைந்திருந்தமையும் அவதானிக்கப்பட்டது.

(இ) தாய் நல இல்லங்களுக்கு பகிர்ந்தளிக்கும் வகையில் சுகாதாரத் திணைக்களத்தின் வழங்கல் பிரிவிற்குக் கிடைத்திருந்த போலிக் அசிட் வில்லைகளுடன் ‘‘பெரௌஸ் சல்பேட்’’ மற்றும் விற்றமின் ‘‘ஏ’’ வில்லைகள் முறையே 61,000 மற்றும் 13,500 அளவில் குறிப்பிட்ட காலத்தில் பகிர்ந்தளிக்கப்படாத காரணத்தினால் காலாவதியாகியிருந்தது.

(ஈ) சுகாதாரத் திணைக்களத்தினால் இலவசமாக வழங்கப்பட்டிருந்த 03 வகையான மருந்துகளில் 132 அலகுகள் மிகையாகவும் ஒரு வகையில் 280 அலகுகள் பற்றாக்குறையும் இருப்புப் பதிவேடுகளின் பிரகாரம் அவதானிக்கப்பட்டது.

(உ) பொரல்ல சிறுவர் சிகிச்சை நிலையத்திற்கு வழங்கப்பட்டிருந்த சில மருந்துகள் குளிரூட்டி செயற்படாதிருந்த காரணத்தினால் பாவனைக்கு பொருத்தமற்ற நிலைக்கு உள்ளாகியிருந்தது. செயற்பொறுப்பு உத்தியோகத்தர் அந்த மருந்துகளை களஞ்சியத்திற்கு மீளக் கையளித்திருக்காததுடன் இது தொடர்பாக இலங்கை குடியரசின் நிதிப் பிரமாணம் 104 இன் பிரகாரம் தேவையான நடடவடிக்கைகளும் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஊ) தாய்நல இல்லம் மற்றும் சிறுவர் நலன்புரி நிலையங்களுக்கு மருந்துகளைக் கொள்வனவு செய்யும் போது கொள்வனவு உடன்படிக்கையின் இரண்டாவது பகுதியின் 03 ஆவது பந்தியின் பிரகாரம் கட்டளையொன்று விடுவிக்கப்பட்ட திகதி தொடக்கம் 14 நாட்களுக்கு முன் அல்லது இனங்காணப்பட்ட தினத்தில் உள்நாட்டு வழங்குனரினால் மருந்து வழங்கல் மேற்கொள்ளப்பட வேண்டியிருந்த போதும் சில வழங்குனரினால் அதற்காக 30 நாட்கள் தொடக்கம் 03 மாதங்கள் வரையான கால தாமதத்து மருந்துகள் வழங்கப்பட்ட அனேக சந்தர்ப்பங்கள் அவதானிக்கப்பட்டன.

(எ) காலாவதியான மருந்து இருப்புக்கள் தொடர்பாக இலங்கைக் குடியரசின் நிதிப் பிரமாணம் 770 மற்றும் 771 இன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படாமல் அழிக்கப்பட்டிருந்தது.

(ஏ) ரூபா 828,382 தொகையான மருந்துகளைக் கொள்வனவு செய்வதற்கு 2009 திசெம்பர் 28 ஆந் திகதி கொள்வனவுக் குழுவினால் தீர்மானிக்கப்பட்டு 2009 திசெம்பர் 31 ஆந் திகதி கட்டளையிடப்பட்டிருந்தது. பின் பத்திரத்தின் பிரகாரம் அது வரையில் கவனத்தில் கொள்ள வேண்டிய மருந்து இருப்புக்கள் காணப்பட்டமை அவதானிக்கப்பட்டது. 2010 ஆகஸ்ட் 31 வரை அந்த மருந்து இருப்புக்களின் சிறிய அளவொன்று விநியோகிக்கப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் தேவையற்ற மருந்து விடயங்கள் கொள்வனவு செய்யப்பட்டிருந்தன.

(ஐ) 2009 ஆம் ஆண்டின் போதும் கட்டளையிடப்பட்டிருந்த ரூபா 235,065 பெறுமதியான மருந்துகள் 2010 திசெம்பர் 31 வரை கிடைத்திருக்கவில்லை.

(ஒ) 2009 ஆம் ஆண்டின் போது மருந்துத் தேவைகள் இனங்காணப்படாமல் கேள்வி கோரப்பட்டிருந்தமையினால் ரூபா 6 மில்லியன் கொள்வனவுகள் மீளாய்வாண்டின் போது கைவிடப்பட்டிருந்தது.

(ஓ) கொள்வனவு செய்யப்பட்ட திகதியிலிருந்து காலாவதியாகும் காலம் இரண்டு வருடங்களுக்குக் குறைவான மருந்துகள் கொள்வனவு செய்ய முடியாது என கேள்வி நிபந்தனைகளில் காணப்பட்ட போதும்

கொள்வனவு செய்யும் திகதியில் காலாவதியாகும் காலம் இரண்டு வருடங்களுக்கு குறைவான ரூபா 2,057,981 பெறுமதியான மருந்துகள் மீளாய்வாண்டின் போது பொது சுகாதார திணைக்களத்தினால் கொள்வனவு செய்யப்பட்டிருந்தது.

## 2.9 முறையற்ற கொடுக்கல் வாங்கல்கள்

மீளாய்வாண்டின் போது இரண்டு உத்தியோகத்தர்களுக்கு வெளிநாட்டுப் பிரயாணங்களுக்காக ஐந்து தினங்களுக்கு அமையக் கொடுப்பனவுகள் செலுத்தும் போது 2010 நவம்பர் 11 ஆந் திகதிய 01/2010/01 (3) (iii) ஆம் இலக்க நிதி மற்றும் கொள்வனவுச் சுற்று நிரூபத்தின் நியமங்களுக்கு முரணாக ரூபா 22,892 தொகை மேலதிகமாகச் செலுத்தப்பட்டிருந்தன.

## 2.10 செயற்பாட்டு செயற்திறனின்மைகள்

(அ) வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சில் மீளளிப்புச் செய்யும் அடிப்படையின் கீழ் சுவீடனில் தூய்மையான நகர நீர் மற்றும் சுகாதார பாடநெறிகள் இரண்டு கட்டங்களில் நடாத்துவதற்காக மாவட்ட பொறியியலாளருக்கு முதலாவது கட்டத்திற்காக ரூபா 128,000 முற்பணம் 2009 செப்தெம்பர் 02 ஆந் திகதி செலுத்தப்பட்டிருந்தது. எவ்வாறாயினும் வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சிலிருந்து முற்பணம் மீளளிப்புச் செய்யப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 2010 ஆம் ஆண்டின் போது வருமான ஆணையாளர் நாயகத்திற்குச் சமர்ப்பிக்கப்பட்ட பெறுமதி சேர்வரி அறிக்கைகளின் பிரகாரம் அறிக்கையிடப்பட்ட வரி அறவிடக் கூடிய வழங்கல் ரூபா 342,718,953 ஆக இருந்ததுடன் இடமளிக்கக் கூடிய ஈடு செய்யும் வரி கணிப்பீடு செய்யும் போது அறிக்கையிடப்பட்ட வரி அறவிடக் கூடிய வழங்கல் ரூபா 381,024,755 ஆக இருந்தது. ரூபா 38,305,802 தொகையான வேறுபாடு விளக்கப்பட்டிருக்கவில்லை.

## 2.11 ஒப்பந்த நிருவாகம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) ஆர்னல்ட் மாவத்தை, கொழும்பு 10 இல் அமைந்துள்ள சனசமூக நிலையத்தின் எஞ்சிய வேலைகளைப் பூர்த்தி செய்வதற்காக ரூபா 9,550,184 தொகைக்கு வழங்கப்பட்ட ஒப்பந்த உடன்படிக்கையின் பிரகாரம் 2010 ஒக்தோபர் 17 ஆந் திகதியில் உள்ளவாறு செயற்பாடுகள் பூர்த்தி செய்யப்பட வேண்டிய போதிலும் 2011 யூலை 04 ஆந் திகதி வரையிலும் அச் செயற்பாடுகள் பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை.

(ஆ) கொழும்பு 14 இல் நிர்மாணிக்கப்பட்டிருந்த தாய்மார் வைத்தியசாலை உடன்படிக்கை செய்யப்பட்ட காலப்பகுதியினுள் பூர்த்தி செய்யப்படாமையினால் அறவிட வேண்டியிருந்த ரூபா 294,400 தொகையான தாமதக் கட்டணத்தை அறவீடு செய்வதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 2.12 அறிவித்தல் பலகைகளை காட்சிப்படுத்துதல்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2010 ஆம் ஆண்டிற்கான அறிவித்தல் பலகைகளை காட்சிப்படுத்துவதற்கு எந்த நிறுவனமும் பதிவு செய்திருக்காத போதிலும் சபை அதிகாரப் பிரதேசத்தில் 04 அறிவத்தல் பலகை நிர்மாணிக்கப்பட்டிருந்தது.

(ஆ) மீளாய்வாண்டின் போது மேற்கொள்ளப்பட்ட களப் பரிசோதனைகளின் போது அவதானிக்கப்பட்டதன் பிரகாரம் அறிவித்தல் பலகைகள் தொடர்பாக 2010 ஆம் ஆண்டின் வழிகாட்டல்களுக்கு முரணாக ஒன்றுக்கொன்று தொடர்பான 08 அறிவித்தல் பலகைகள் நிர்மாணிக்கப்பட்டிருந்ததுடன் தடை செய்யப்பட்ட பிரதேசங்களில் 04 அறிவித்தல் பலகைகள் நிர்மாணிக்கப்பட்டிருந்தது. மேலும் சுற்று வட்டங்களில் மிகவும் அருகில் 03 அறிவித்தல் பலகைகள் நிர்மாணிக்கப்பட்டிருந்தமையும் அவதானிக்கப்பட்டது.

(இ) சபையின் அங்கீகாரமின்றி நகர எல்லையினுள் 13 அறிவித்தல் பலகைகள் நிர்மாணிக்கப்பட்டிருந்தன.

## 3. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

பின்வரும் முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுத் துறைகள் தொடர்பாக விசேட கவனம் கோரப்படுகின்றது.

(அ) கணக்கீடு

(ஆ) வருமான நிர்வாகம்

(இ) உள்ளகக் கணக்காய்வு

(ஈ) பாதீட்டுக் கட்டுப்பாடு

(உ) சொத்துககள் முகாமைத்துவம்

(ஊ) ஊழியர் கடன் கட்டுப்பாடு

(எ) ஒப்பந்த நிர்வாகம்

(ஏ) வாகனப் பயன்பாடு